17th August 1963]

திரு. கே. ஏ. மதியழகன் : முதலிலே இந்தித் தேர்வு வேண்டாம் என்பதற்கும் அமைச்சர் அவர்கள் காரணம் சொன்னார்கள். வேண்டும் என்பதற்கும் காரணம் சொன்னார்கள். அவ்வளவு விரைவாக மாறுதல் ஏற்படவேண்டிய காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேண்டாம் என்பதற்குச் சொன்ன காரணத்திற்கும், வேண்டும் என்று சொன்ன காரணத்திற்கும் ஒன்றும் முரண்பாடு இல்லை. அதனால் மாறுதல் ஒன்றும் இல்லை.

Fair Price Shops

* 192 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state;

(*a*) whether it is a fact that only raw-rice is supplied to the Fair Price Shops for sale; and

(*b*) whether there is any proposal to close the Fair Price Shops ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No. Boiled rice is also supplied to the fair price shops.

(*b*) No.

(அ) இல்லை. புழுங்கலரிசியும் கொடுக்கப்படுகிறது.

(இ) இல்லை.

திரு. மு. சண்முகம் : அரிசி போன்ற இன்னும் பல பொருள்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது என்று அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தும், அரிசிக்கு நியாயவிலைக் கடைகள் இருப்பது போல மற்ற பொருள்களுக்கும் நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கத்திற்கு அப்படி உத்தேசம் இல்லை. சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில் கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடி என்று ஏற்படுத்தி இதர பொருள்களையும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : நியாயவிலைக் கடைகளில் விற்கப்படும் அரிசி விலைக்கும், மற்ற கடைகளில் விற்கப்படும் அரிசி விலைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிற காரணத்தினால் சென்னை நகர வியாபாரிகளைக் கூட்டி கலெக்டர் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள் என்பது உண்மைதானா?

கனம் திரு. பூ. கக்கன் : கலெக்டர் ஒருவேளை எச்சரிக்கை பண்ணியிருக்கலாம். அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

Loans to agriculturists.

* 193 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(a) the amount provided in 1962-63 for being advanced to agriculturists as long term loans through Land Mortgage banks; and

(*b*) the amount disbursed so far ?